(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 66.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

**2011, சனவரி 05, புதன்கிழமை, பி. ப. 1.00 மணிக்கு**

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0049/ '10

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தென் மாகாணத்தின் ஒவ்வொரு மாவட்டத்திலுமுள்ள மாவட்ட தள வைத்தியசாலைகளின் எண்ணிக்கையை வெவ்வேறாகவும்,

(ii) ஒரு மாவட்ட, தள வைத்தியசாலைகளில் இருக்க வேண்டிய பதவிகளின் ஆகக்குறைந்த எண்ணிக்கையையும்,

(iii) மேற்படி வைத்தியசாலைகள் ஒவ்வொன்றிலும் தற்போது இருக்கும் பதவிகளின் எண்ணிக்கையையும்,

(iv) மேற்குறிப்பிட்ட வைத்தியசாலைகள் ஒவ்வொன்றிலும் காணப்படும் பதவி வெற்றிடங்கள் எண்ணிக்கையை வெவ்வேறாகவும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி வைத்தியசாலைகள் ஒவ்வொன்றும் மாவட்ட வைத்தியசாலையாக தரமுயர்த்தப்பட்ட திகதியையும்,

(ii) அது யாரால் செய்யப்பட்டதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) மேற்படி வைத்தியசாலைகள் ஒவ்வொன்றிலும் காணப்படும் மனித மற்றும் பௌதீக வளப்பற்றாக்குறைகள் எக்கால வரையறைக்குள் தீர்க்கப்படும் என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0253/ '10

2.

கௌரவ சஜித் பிரேமதாஸ,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அம்பாந்தோட்டை மாவட்டத்தின் அம்பாந்தோட்டை வலயக் கல்வி அலுவலகத்திற்குட்பட்ட லுனுகம்வெஹர கோட்டக் கல்வி அலுவலகத்தினால் நிர்வகிப்படும் அரசாங்க பாடசாலைகளில் கல்வி பெறும் மாணவர்களின் பரீட்சையில் சித்தியடையும் சதவீதம் குறைந்து வருகின்றதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி கல்வி வலயத்தில் 2007, 2008, 2009 ஆம் ஆண்டுகளில் க.பொ.த உயர் தரத்தில் சித்தியடைந்து பல்கலைக்கழக கல்வியைப் பெறுவதற்கு தகுதி பெற்ற மாணவர்களின் எண்ணிக்கையையும் அவர்களது பாடசாலைகளின் பெயர்களையும் தனித்தனியாக அவர் இச் சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) வருட ஆரம்பத்தில் பாட புத்தகங்களும் ஆசிரியர்களுக்கான பாடவிதானங்களும் உரிய நேரத்தில் கிடைக்கப்பெறாமை, மாணவர்களின் கல்வி நிலை வீழ்ச்சி அடைவதற்கு காரணமாயுள்ளதென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா என்பதையும்,

(ii) ஆமெனின், அம்மாணவர்களின் கல்வி நிலையை மேம்படுத்துவதற்கும் ஆற்றல்களை வளர்ப்பதற்கும் தேவையான பாடப் புத்தகங்களை உரிய நேரத்தில் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச் சபையில் குறிப்பிடுவாரா?

(ஈ) (i) மேற்படி பாடசாலைகளை உரிய முறையில் கண்காணிப்பதற்காக உரிய உத்தியோத்தர்களை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(ii) ஆமெனின், அதற்காக மேற்கொள்ளப்படும் வழிமுறைகள் யாவை என்பதையும்

அவர் இச் சபையில் அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0543/ '10

3.

கௌரவ எம். ரி. ஹசன் அலி,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பு 10, மாளிகாவத்தை பிளேசில் 151/ஏ/8 ஆம் இலக்கத்தில் வசிக்கும் 48 வயதுடைய திரு. முஹம்மட் பஷீர், சிறுநீரக நோயால் அவதியுறும் ஒருவர் என்பதையும்,

(ii) நிரந்தர வருமானம் எதுவும் இல்லாத திரு. பஷீருக்கு சமுர்த்தி நிவாரணத்தை வழங்குவதற்கு, அப்பிரதேச சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் இதுவரை நடவடிக்கை மேற்கொள்ளவில்லை என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) திரு. பஷீருக்கும் அவரது குடும்ப அங்கத்தினர்களுக்கும் தாமதமின்றி, சமுர்த்தி நிவாரண உரிமையை வழங்குவதற்கு அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0565/ '10

4.

கௌரவ புத்திக பத்திரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2004/14 உச்சம மட்டத்தில் தேங்கி நிற்றலிலான அநுகூலச் சுற்றறிக்கை, 2005/04 பதவியுயர்வுச் சுற்றறிக்கை மற்றும் 2008/45 பட்டப்படிப்பு பட்டமின்றியுள்ள பட்டதாரி ஆசிரியர்களுக்கு பதவியுயர்வு வழங்குதல் ஆகிய சுற்றறிக்கைகளின் பிரகாரம் மாத்தறை மாவட்டத்தின் நான்கு கல்வி வலயங்களைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு பதவியுயர்வுகள் வழங்கப்பட்டன என்பதையும்,

(ii) இதனோடு தொடர்புடைய நிலுவைச் சம்பளம் இற்றைவரை செலுத்தப்பட வில்லை என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) 2004/14, 2005/04 மற்றும் 2008/45 சுற்றறிக்கைகளுக்கிணங்க பதவியுயர்வுகள் வழங்கப்பட்டுள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கை மற்றும் அதற்கிணங்க நிலுவைச் சம்பளம் வழங்கப்பட்டுள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவென்பதையும்,

(ii) இத்தருணமாகும் போது நிலுவைச் சம்பளம் கிடைக்க வேண்டிய ஆசிரியர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(iii) நிலுவைச்சம்பளம் அவர்களுக்கு செலுத்த வேண்டிய மொத்தப் பணத்தொகை எவ்வளவென்பதையும்,

(iv) இற்றைவரை நிலுவைச் சம்பளம் செலுத்தப்படாமைக்கான காரணம் யாதென்பதையும்,

(v) நிலுவைச் சம்பளம் செலுத்தி முடிக்கப்படும் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0576/ '10

5.

கௌரவ ஜோன் அமரதுங்க,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ரத்தொழுகம வீடமைப்புத் தொகுதியின் எல்லையிலுள்ள கால்வாய்க்குக் குறுக்காக, ஏலத்தில் விடப்பட்ட காணியில் வசிக்கும் வணிக சிங்க என்பவருக்கு ஒரு பாதையைப் பெற்றுக் கொடுப்பதற்கு வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் முன்னாள் பொது முகாமையாளர் திட்டமிட்டிருந்தார் என்பதையும்,

(ii) அதிமேதகு ஜனாதிபதியிடம் வீட்டு உரிமையாளர்கள் முறைப்பாடு செய்தமைக்கமைய, வீடமைப்பு, நிர்மாணத்துறை அமைச்சின் செயலாளருக்கு ஜனாதிபதி செயலகத்தால் 2006.01.31 ஆம் திகதி அனுப்பப்பட்ட கடிதத்தின் மூலம் அந்தப் பாதையை மூடிவிடுவதற்கு கட்டளையிடப்பட்டதென்பதையும்,

(iii) முன்னாள் பொது முகாமையாளர் வனிகசிங்க ஊடாக பாராளுமன்ற ஆலோசனைக் குழுவிற்கு போலியான விடயங்களை சமர்ப்பித்து அந்த பாதையை பெற்றுக் கொடுப்பதற்கு திட்டமிட்டுள்ளார் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) வனிகசிங்க என்பவரின் வீட்டுக்கு முன்புறமாக அகலமானதொரு பாதை உள்ளதென்பதையும்,

(ii) வீட்டுக்குப் பின்புறமாகவும் ஒரு பாதையை பெற்றுக் கொடுக்க பற்றுச் சீட்டு மூலம் பணத்தைப் பெற்றுக்கொண்டு உறுதியொன்றை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதென்பதையும்,

(iii) இது பாராளுமன்ற வரலாற்றில் ஆலோசனைக் குழுவைத் தப்பான வழியில் இட்டுச் சென்ற முதல் சந்தர்ப்பமாகும் என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) உரிய சகல அறிக்கைகளும் அதிகாரசபையின் தலைவரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளதால் அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் 2006.01.31 ஆம் திகதிய கடிதத்தின் விதப்புரைக்கு அமைய அந்தப் பாதையை மூடிவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0635/ ’10

6.

கௌரவ ஹேமால் குணசேக்கர,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2009 ஆம் ஆண்டு மூடப்பட்ட பாடசாலைகளில்,

(i) ஆரம்பநிலை வகுப்புக்கள் மாத்திரம் நடைபெற்ற பாடசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) சாதாரண தரம் வரை வகுப்புக்கள் நடைபெற்ற பாடசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iii) உயர் தரம் வரை வகுப்புக்கள் நடைபெற்ற பாடசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்

வெவ்வேறாக அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) அந்தப் பாடசாலைகள் மூடப்படுவதற்கான பிரதான காரணம் என்னவென்பதையும்,

(ii) இவ்வாறு பாடசாலைகள் மூடப்படுவதைத் தடுத்து நிறுத்த உத்தேச நடவடிக்கை ஏதேனும் இருக்கின்றதா என்பதையும்,

(iii) அவ்வாறெனின், அது யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0638/ ’10

7.

கௌரவ அருந்திக்க பர்னாந்து,— கமத்தொழில் சேவைகள், வன சீவராசிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வில்பத்து வனப் பூங்காவின் பாதுகாப்பு மற்றும் அபிவிருத்திக் கருத்திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்படுகின்ற பாதுகாப்பு மற்றும் அபிவிருத்திக் கட்டடங்கள் யாவையென்பதையும்,

(ii) மேற்படி கருத்திட்டத்திற்கான மதிப்பிடப்பட்ட மொத்தச் செலவு யாதென்பதையும்,

(iii) கருத்திட்டத்தினை நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கும் அண்டு யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி கருத்திட்டத்தின் முடிவில் வனப் பூங்காவிலிருந்து ஈட்டுவதற்கு எதிர்பார்க்கும் வருடாந்த வருமானம் எவ்வளவு என்பதை அவர் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0639/ ’10

8.

கௌரவ (டாக்டர்) ரமேஷ் பதிரண,— சிவில் விமானச் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாந்தோட்டை மாவட்டத்தின் மத்தல விமான நிலையத்தை நிர்மாணிப் பதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட மொத்தத் தொகை எவ்வளவென்பதையும்,

(ii) மேற்படி நிர்மாணப்பணிக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிலப்பரப்பின் அளவு எத்தனை ஹெக்ரயர் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) குறித்த நிர்மாணப்பணிகளுக்காக மேற்படி பிரதேசத்திலிருந்து அப்புறப் படுத்தப்பட வேண்டியுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) மேற்படி குடும்பங்களில் சட்டரீதியான குடியிருப்பாளர்களினதும் அனுமதியற்ற குடியிருப்பாளர்களினதும் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்,

(iii) மேற்படி குடும்பங்களுக்கு மாற்றுக் காணிகளை பெற்றுக் கொடுக்கும் செயற்திட்டமேதும் உண்டா என்பதையும்,

(iv) ஆமெனில், அது யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேமற்படி விமான நிலைய நிர்மாணப்பணிகளை நிறைவு செய்ய எதிர்பார்த்துள்ள வருடம் யாதென்பதையும்,

(ii) புதிய விமான நிலையத்தை நிர்மாணித்ததன் பின்னர் அதனை பயன்படுத்துபவர்கள் என எதிர்பார்க்கப்படுகின்ற வருடாந்த விமானப் பணிகளின் எண்ணிக்கை அண்ணளவாக எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்குக் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0706/ '10

9.

கௌரவ கயந்த கருணாதிலக,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காலி மாவட்டத்தில் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும், 2005 ஆம் ஆண்டு தொடக்கம் 2009 ஆம் ஆண்டு வரையான ஒவ்வோர் ஆண்டிலும் யூன் மாதம் 30ஆம் திகதியன்று உரித்துடையோராயிருந்த சமுர்த்தி பெறுநர்களின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவென்பதையும்,

(ii) அவ்வாறு உரித்துடையோருக்குச் செலுத்தப்பட்ட பணத் தொகைகள், இவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்,

(iii) 2005, 2006, 2007, 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் சமுர்த்தி பெறுநர்களுக்கு ஆண்டுதோறும் செலுத்தப்பட்ட மொத்தப் பணத் தொகை தனித்தனியாக எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி ஒவ்வோர் ஆண்டிலும் சமுர்த்தி பெறுநராக விளங்கிய எனினும், பின்னர் நீக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை, இவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்,

(ii) அவ்வாறு நீக்கப்பட்டதற்கான அடிப்படை யாதென்பதையும்,

(iii) மேற்படி கால எல்லையில் புதிதாகச் சேர்ந்த சமுர்த்தி பெறுநர்கள் இருப்பார்களாயின் இவர்களுக்குச் செலுத்தப்பட்ட பணத் தொகை மற்றும் இவர்களின் முகவரிகள் ஆண்டுதோறும் தனித்தனியாக யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0707/ ’10

10.

கௌரவ துனேஷ் கங்கந்த,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வடக்கு கிழக்கு புனர்வாழ்வு அமைப்பு (NERDO - North East Rehabilitation and Development Organization) என்ற அமைப்பொன்று இலங்கையில் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) ஆமெனில், பதிவு செய்யப்பட்ட திகதி யாதென்பதையும்,

(iii) அவ்வமைப்பு தாபிக்கப்பட்ட நோக்கங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி அமைப்பின் அலுவலகம் அமைந்துள்ள இடம், அதன் முக்கியஸ்தர்களின் பெயர்கள், பணியாளர்களின் எண்ணிக்கை, இவர்களின் பெயர்கள் மற்றும் விலாசங்கள் யாவையென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0877/ ’10

11.

கௌரவ அஜித் பி. பெரேரா,— சிவில் விமானச் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வீரவில சர்வதேச விமான நிலையத்தை நிர்மாணிப்பதற்காக 2007,2008, 2009, 2010 ஆகிய வருடங்களில் செலவிட்ப்பட்ட தொகை வருடாந்தம் தனித்தனியே எவ்வளவென்பதையும்,

(ii) மேற்படி கருத்திட்டம் தொடர்ந்து முன்னெடுக்கப்படுகின்றதா என்பதையும்,

(iii) இன்றேல், இதற்கான காரணங்கள் யாவையென்பதையும்,

(iv) மேற்படி கருத்திட்டம் கைவிடப்பட்டதால் இலங்கை அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ள நட்டம் எவ்வளவென்பதையும்,

(v) மேற்படி நட்டம் ஏற்படுவதற்கு பொறுப்பானவர் அல்லது பொறுப்பானவர்கள் யார் என்பதையும்,

(vi) இவர்களுக்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0050/ ‘10

12.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பெற்றோலியக் கைத்தொழில்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் (சிபிசி) உற்பத்தி செய்யப்படும் அல்லது இறக்குமதி செய்யப்படும் எல்லா உற்பத்திப் பொருட்களையும்,

(ii) வெவ்வேறுபட்ட ஒவ்வொரு பொருளினதும் செலவு (இலாபம் தவிர்ந்த விற்பனை விலை) மற்றும் செலவினது ஆக்கஅமைவின் விபரத்தையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கீழே தரப்பட்டவாறு, செலவினத்தின் (கிரயத்தின்) சகல கட்டங்களிலும் உள்ள எல்லா வரிகளையும்,

| | | |
|---|---|---|
| விற்பனை விலை | | x x x x x |
| உற்பத்திச் செலவு | x x x | |
| நிருவாகச் செலவு | x x x | |
| சந்தைப்படுத்தச் செலவு | x x x | |
| மூலதனச் செலவு | x x x | |
| விளம்பரப்படுத்தற் செலவு | x x x | x x x x x |
| மொத்த இலாபம் | x x x | x x x x x |
| வரிகளைக் கழிக்க | | |
| (எல்லா வகைகளும் வெவ்வேறாகக் குறிப்பிடலாம்) | | x x x x x |
| தேறிய இலாபம் | | |

(ii) கடந்த 15 வருடங்களுக்கான, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினதும் (சி.பி.சி.) அதன் துணைக் கம்பனிகளினதும் வருடாந்த இலாபத்தையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) இதுவரை ரூபாவாக மாற்றப்படவிருக்கும் டொலர்கள் மீது வங்கிகளுக்கான மொத்தப் படுகடனையும்,

(ii) நாணய மாற்று இழப்பினை ஏற்றுக்கொள்பவர் யார் என்பதையும்,

(iii) மேலே (i) இல் உள்ளவாறு, விற்கப்பட்ட மொத்தத் தொகையையும் அதற்குரிய மொத்த நாணயப் பெறுமதியுடனும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0254/ '10

13.

கௌரவ சஜித் பிரேமதாஸ,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அம்பாந்தோட்டை மாவட்டத்தின் அம்பாந்தோட்டை வலயக் கல்வி அலுவலகத்திற் குட்பட்ட திஸ்ஸமஹாராம கோட்டக் கல்வி அலுவலகத்தினால் நிர்வகிப்படும் அரசாங்க பாடசாலைகளில் கல்வி பெறும் மாணவர்களின் பரீட்சையில் சித்தியடையும் சதவீதம் குறைந்து வருகின்றதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி கல்வி வலயத்தில் 2007, 2008,2009 ஆம் ஆண்டுகளில் க.பொ.த உயர் தரத்தில் சித்தியடைந்து பல்கலைக்கழக கல்வியைப் பெறுவதற்கு தகுதி பெற்ற மாணவர்களின் எண்ணிக்கையையும் அவர்களது பாடசாலைகளின் பெயர்களையும் தனித்தனியாக அவர் இச் சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) வருட ஆரம்பத்தில் பாட புத்தகங்களும் ஆசிரியர்களுக்கான பாடவிதானங்களும் உரிய நேரத்தில் கிடைக்கப்பெறாமை மாணவர்களின் கல்வி நிலை வீழ்ச்சி அடைவதற்கு காரணமாயுள்ளதென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா என்பதையும்,

(ii) ஆமெனின், அம்மாணவர்களின் கல்வி நிலையை மேம்படுத்துவதற்கும் ஆற்றல்களை வளர்ப்பதற்கும் தேவையான பாட புத்தகங்களை உரிய நேரத்தில் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச் சபையில் குறிப்பிடுவாரா?

(ஈ) (i) மேற்படி பாடசாலைகளை உரிய முறையில் கண்காணிப்பதற்காக உரிய உத்தியோத்தர்களை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(ii) ஆமெனின் அதற்காக மேற்கொள்ளப்படும் வழிமுறைகள் யாவை என்பதையும்

அவர் இச் சபையில் அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0436/ '10

14.

கௌரவ ரவி கருணாநாயக்க,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வடக்கு, கிழக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களில் இயங்கிக் கொண்டிருக்கும் பல்கலைக்கழககங்களின் எண்ணிக்கையையும்,

(ii) மேற்படி (i) இல் குறிப்பிடப்பட்ட பல்கலைக்கழகங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கையையும்,

(iii) பல்கலைக்கழகத்தின் பீட வாரியாக மாணவர் ஒருவருக்கான செலவையும்,

(iv) அப்பல்கலைக்கழகங்களில் தொழில் புரியும் விரிவுரையாளர்களின் எண்ணிக்கையையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) ஒவ்வொரு பல்கலைக்கழகத்தினதும் வருடமொன்றிற்கான பல்கலைக் கழகத்தினதும் வருடமொன்றிற்கான கல்வி நடவடிக்கை நாட்களின் எண்ணிக்கையையும்,

(ii) கடந்த 3 வருடங்களில் அப்பல்கலைக்கழகங்கள் யதார்த்தபூர்வமாக இயங்கிய நாட்களின் எண்ணிக்கையையும் வருடவாரியாகவும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0255/ '10

15.

கௌரவ சஜித் பிரேமதாஸ,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அம்பாந்தோட்டை மாவட்டத்தின் அம்பாந்தோட்டை வலயக் கல்வி அலுவலகத்திற்குட்பட்ட அம்பாந்தோட்டை கோட்டக் கல்வி அலுவலகத்தினால் நிர்வகிப்படும் அரசாங்க பாடசாலைகளில் கல்வி பெறும் மாணவர்களின் பரீட்சையில் சித்தியடையும் சதவீதம் குறைந்து வருகின்றதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி கல்வி வலயத்தில் 2007, 2008,2009 ஆம் ஆண்டுகளில் க.பொ.த உயர் தரத்தில் சித்தியடைந்து பல்கலைக்கழக கல்வியைப் பெறுவதற்கு தகுதி பெற்ற மாணவர்களின் எண்ணிக்கையையும் அவர்களது பாடசாலைகளின் பெயர்களையும் தனித்தனியாக அவர் இச் சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) வருட ஆரம்பத்தில் பாட புத்தகங்களும் ஆசிரியர்களுக்கான பாடவிதானங்களும் உரிய நேரத்தில் கிடைக்கப்பெறாமை மாணவர்களின் கல்வி நிலை வீழ்ச்சியடைவதற்கு காரணமாயுள்ளதென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா என்பதையும்,

(ii) ஆமெனின், அம்மாணவர்களின் கல்வி நிலையை மேம்படுத்துவதற்கும் ஆற்றல்களை வளர்ப்பதற்கும் தேவையான பாட புத்தகங்களை உரிய நேரத்தில் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச் சபையில் குறிப்பிடுவாரா?

(ஈ) (i) மேற்படி பாடசாலைகளை உரிய முறையில் கண்காணிப்பதற்காக உரிய உத்தியோத்தர்களை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(ii) ஆமெனின் அதற்காக மேற்கொள்ளப்படும் வழிமுறைகள் யாவை என்பதையும்

அவர் இச் சபையில் அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## சட்டமூல சமர்ப்பண முன்னறிவித்தல்

1.

சமூக சேவைகள் அமைச்சர்,— முதியோரின் உரிமைகளைப் பாதுகாத்தல் (திருத்தம்),— 2000 ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க, முதியோரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

2.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள்,— ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் பொது அலுவல்களில் 2ஆம் இலக்க பிரேரணை மீதான நடவடிக்கைகள் இன்றைய அமர்வில் 23 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளிலிருந்து விலக்குப்பெறுமாக.

3.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு,— 7 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2010.07.09 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல் இன்றைய தினம் சபை அமர்வு நேரம் பி.ப. 1.00 மணி முதல் பி.ப. 7.00 மணிவரை இருக்குமாக. பி.ப.7.00 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

4.

கௌரவ (திருமதி) ஸ்ரீயாணி விஜேவிக்கிரம,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல.1),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக:-

"குடாபுத்கமுவ ஸ்ரீ பியதஸ்ஸநாராம செயற் சாதனைச் சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்."

5.

கௌரவ (திருமதி) மாலனீ பொன்சேக்கா,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல.2),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக:-

"லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ் மற்றும் சுமித்ரா பீரிஸ் மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்."

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 2.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் பிரேரணை,— 1959 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தினாலும், தேசிய அரசுப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்கச் சட்டத்தினாலும், 1988 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் திருத்தம் செய்யப்பட்ட (40 ஆம் அத்தியாயமான) பொது மக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் மாண்புமிகு சனாதிபதியவர்களால், மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் II ஆம் பாகத்தின் ஏற்பாடுகள் 2010 திசெம்பர் மாதம் 29 ஆம் திகதியிலிருந்து இலங்கையெங்கனும் நடைமுறைப்படுத்திக்கொண்டு செய்யப்பட்ட பிரகடனம் அங்கீகரிக்கப்படுமாக.

* 3.

வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 4.

தீங்கு விளைவிக்கும் ஆயுதங்கள் (திருத்தம்) சட்ட மூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 5.

மத்தியஸ்த்த சபைகள் (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 6.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள், — 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 7.

உள்ளூர் அதிகாரசபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2011, சனவரி 04) [1].

* 8.

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2011, சனவரி 04) [1].

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

0219/ '10

1.

கௌரவ அஜித் குமார,— நீர் வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாந்தோட்டை மாவட்டத்தின், ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவிலும் தற்போது செயற்படுத்தப்படுகின்ற, நீர் வழங்கல் கருத்திட்டங்கள் யாவை என்பதையும்,

(ii) மேற்படி ஒவ்வொரு கருத்திட்டத்தினாலும் உள்வாங்கப்படும் பிரிவுகள் மற்றும் நீர் தேவையினைப் பூர்த்தி செய்து கொள்ளும், குடும்ப அலகுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iii) தற்போது, மேற்படி ஒவ்வொரு கருத்திட்டத்தினாலும், வழங்கப்படும் நீரினளவு போதுமானதாகவுள்ளதா என்பதையும்,

(iv) கருத்திட்டங்களின் நீரின் கொள்ளளவு போதுமானதாக இல்லாதிருப்பின், அதுகுறித்து எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அம்பாந்தோட்டை மாவட்டத்தினுள் பெருமளவு குடிநீர் தேவை இருப்பதாக அடையாளம் காணப்பட்ட புதிய பிரதேசங்கள் யாவையென்பதையும்,

(ii) தற்போது மேற்படி பிரதேசங்களுக்கு நீர் வழங்குவதற்கான திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளனவா என்பதையும்,

(iii) ஆமெனில், அக்கருத்திட்டங்கள் யாவையென்பதையும்,

(iv) ஒவ்வொரு கருத்திட்டத்திற்கும் நீர் பெற்றுக்கொள்ள உத்தேசிக்கும், நீர் மூலங்கள் யாவையென்பதையும்,

(v) இக்கருத்திட்டங்களிலிருந்து குடிநீர் வசதியினை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படும் குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(vi) திட்டமிடப்பட்டுள்ள கருத்திட்டங்களை செயற்படுத்துவது தொடர்பான எதிர்கால வேலைத்திட்டங்கள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0220/ '10

2.

கௌரவ அஜித் குமார,— நீர் வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தின், ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவிலும் தற்போது செயற்படுத்தப்படுகின்ற, நீர் வழங்கல் கருத்திட்டங்கள் யாவை என்பதையும்,

(ii) மேற்படி ஒவ்வொரு கருத்திட்டத்தினாலும் உள்வாங்கப்படும் பிரிவுகள் மற்றும் நீர் தேவையினைப் பூர்த்தி செய்து கொள்ளும், குடும்ப அலகுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iii) தற்போது, மேற்படி ஒவ்வொரு கருத்திட்டத்தினாலும், வழங்கப்படும் நீரினளவு போதுமானதாகவுள்ளதா என்பதையும்,

(iv) கருத்திட்டங்களின் நீரின் கொள்ளளவு போதுமானதாக இல்லாதிருப்பின், அதுகுறித்து எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மாத்தறை மாவட்டத்தினுள் பெருமளவு குடிநீர் தேவை இருப்பதாக அடையாளம் காணப்பட்ட புதிய பிரதேசங்கள் யாவையென்பதையும்,

(ii) தற்போது மேற்படி பிரதேசங்களுக்கு நீர் வழங்குவதற்கான திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளனவா என்பதையும்,

(iii) ஆமெனில், அக்கருத்திட்டங்கள் யாவையென்பதையும்,

(iv) ஒவ்வொரு கருத்திட்டத்திற்கும் நீர் பெற்றுக்கொள்ள உத்தேசிக்கும், நீர் மூலங்கள் யாவையென்பதையும்,

(v) இக்கருத்திட்டங்களிலிருந்து குடிநீர் வசதியினை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படும் குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(vi) திட்டமிடப்பட்டுள்ள கருத்திட்டங்களை செயற்படுத்துவது தொடர்பான எதிர்கால வேலைத்திட்டங்கள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0221/ '10

3\.

கௌரவ அஜித் குமார,— நீர் வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) களுத்துறை மாவட்டத்தின், ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவிலும் தற்போது செயற்படுத்தப்படுகின்ற, நீர் வழங்கல் கருத்திட்டங்கள் யாவை என்பதையும்,

(ii) மேற்படி ஒவ்வொரு கருத்திட்டத்தினாலும் உள்வாங்கப்படும் பிரிவுகள் மற்றும் நீர் தேவையினைப் பூர்த்தி செய்து கொள்ளும், குடும்ப அலகுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iii) தற்போது, மேற்படி ஒவ்வொரு கருத்திட்டத்தினாலும், வழங்கப்படும் நீரினளவு போதுமானதாகவுள்ளதா என்பதையும்,

(iv) கருத்திட்டங்களின் நீரின் கொள்ளளவு போதுமானதாக இல்லாதிருப்பின், அதுகுறித்து எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) களுத்துறை மாவட்டத்தினுள் பெருமளவு குடிநீர் தேவை இருப்பதாக அடையாளம் காணப்பட்ட புதிய பிரதேசங்கள் யாவையென்பதையும்,

(ii) தற்போது மேற்படி பிரதேசங்களுக்கு நீர் வழங்குவதற்கான திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளனவா என்பதையும்,

(iii) ஆமெனில், அக்கருத்திட்டங்கள் யாவையென்பதையும்,

(iv) ஒவ்வொரு கருத்திட்டத்திற்கும் நீர் பெற்றுக்கொள்ள உத்தேசிக்கும், நீர் மூலங்கள் யாவையென்பதையும்,

(v) இக்கருத்திட்டங்களிலிருந்து குடிநீர் வசதியினை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படும் குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(vi) திட்டமிடப்பட்டுள்ள கருத்திட்டங்களை செயற்படுத்துவது தொடர்பான எதிர்கால வேலைத்திட்டங்கள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

4.

கௌரவ அஜித் குமார,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாந்தோட்டை மாவட்டத்தில் காணி சீர்த்திருத்த ஆணைக்குழுவுக்குச் சொந்தமான காணிகள் உள்ளனவா என்பதையும்,

(ii) ஆமெனின், ஒவ்வொரு காணியினதும் பெயர், பரப்பளவு, அமைந்துள்ள கிராம உத்தியோகத்தர் பிரிவு, காணியின் இயல்பு யாதென்பதையும்,

(iii) ஒவ்வொரு காணியினதும் வருடாந்த வருமானம் எவ்வளவென்பதையும்,

(iv) அக்காணிகளின் உரிமை சட்டரீதியாக நபர்களுக்கோ அல்லது நிறுவனங்களுக்கோ ஒப்படைக்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(v) ஆமெனின், காணி ஒப்படைக்கப்பட்ட விடயம் மற்றும் அடிப்படை யாவை என்பதையும்,

(vi) காணி கிடைக்கப்பெற்றவர்கள் அல்லது நிறுவனங்களின் பெயர், முகவரி, ஒப்படைத்த திகதி, காணியின் பரப்பளவு கால எல்லை யாவை என்பதையும்,

(vii) ஒவ்வொரு காணியிலிருந்தும் ஆணைக்குழுவுக்கு கிடைக்கும் வருமானம் எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) ஆணைக்குழுவின் காணிகள் சட்ட ரீதியிலல்லாத விதத்தில் நபர்கள் அல்லது நிறுவனங்களினால் பயன்படுத்தப்படுகின்றனவா என்பதையும்,

(ii) ஆமெனின், அவர்களது பெயர்கள், பயன்படுத்தப்படும் காணியின் பரப்பளவு மற்றும் கால வரையறை எவை என்பதையும்,

(iii) இவை தொடர்பில் எடுத்த நடவடிக்கைகள் மற்றும் தற்போதைய நிலை என்னவென்பதையும்,

(iv) ஆரம்பத்திலும், தற்போதும் ஆணைக்குழுவிற்கு சொந்தமாகவுள்ள காணிகளின் பரப்பளவு எவ்வளவென்பதையும்,

(v) ஆரம்பத்தில் இருந்த காணிகளின் பரப்பளவிலிருந்து பிறருக்கு ஒப்படைக்கப்பட்ட காணிகளின் பரப்பளவு எவ்வளவென்பதையும்,

(vi) உடமையை ஒப்படைக்கப்பட்டவர்களின் பெயர், முகவரி, காணியின் பரப்பளவு யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?